அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 09/2014

எனது இல : EST-7/LEAVE/03/3162
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.05.19

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் பிரிவு 16 இனைத் திருத்துதல்**

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் பிரிவு 16 இன்பால் தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. புலமைப்பரிசில்கள் தொடர்பில் உயர்கல்விக்காக நாட்டினை விட்டுப் புறப்படும் அரசாங்க அலுவலரின் வாழ்க்கைத் துணைக்கும் (அரச துறையில் சேவையாற்றும்) உரிய அலுவலருடன் நாட்டினைவிட்டுப் புறப்படும் பொருட்டு தாபன விதிக்கோவையின் மேற்படி பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கைக்கு வெளியே செலவிடப்படுவதற்கான சம்பளமற்ற விடுமுறையினை வழங்குவதற்கு 2014.02.13 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கிணங்க, தாபன விதிக்கோவையின் அத்தியாயம் ஓஜஜ இன் பிரிவு 16 ஆனது பின்வரும் உட் பிரிவுகள் 16:1:9 மற்றும் 16:1:10 என்பனவற்றின் உள்ளடக்கத்துடன் திருத்தப்படுதல் வேண்டும்.

16:1:9 இவ் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க புலமைப் பரிசில்களுக்காக அரசாங்க அனுசரனையுடன் நாட்டினை விட்டுப் புறப்படும் அரசாங்க அலுவலரின் வாழ்க்கைத் துணைக்கு (அரச துறையில் சேவையாற்றும்) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உரிய அலுவலருடன் நாட்டினை விட்டுப் புறப்படும் பொருட்டு சம்பளமற்ற விடுமுறையானது வழங்கப்படுதல் வேண்டும்.

16:1:9:1 வாழ்க்கைத் துணைக்கு வீசா வழங்கப்பட்டிருக்காத அத்தகைய சந்தர்ப்பங்களில் உரிய நாட்டுக்கு நுழைவதற்கு வீசாவினைப் பெற்றுக்கொள்வதற்கு இது அவருக்கு ஒரு முறையற்ற நடைமுறையாகத் தொழிற்படக்கூடாது.

16:1:10 வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சம்பளமற்ற விடுமுறையினை வழங்குதல் தொடர்பில் 16 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட ஏனைய சகல நிபந்தனைகளும் 16:1:9 ஆம் உட் பிரிவின் கீழ் விடுமுறையினை வழங்கும் போது பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

ஒப்பம்/பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு